நவீனத் தமிழாய்வு
(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

Journal of
Modern Thamizh Research
(A Quarterly International Multilateral Thamizh Journal)

Vol. 9 No. 2
பங்குனி-ஆனி 2052
April - June 2021
ISSN : 2321 - 984X

Chief Editor
Dr. M. Sadik Batcha

Advisory Editor
Dr. N. Chandra Segaran

Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. Aranga. Pari
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
M. Ramakrishnan
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr.M. Arunachalam
Dr. S. Vignesh Ananth
Dr. Pon. Kathiresan
Dr. S. Bharathi Prakash

# சான்றிதழ் / Certificate

*This is to certify that Dr. / Mr. / Ms.*

கா.ஜான் கென்னடி
முனைவர் பட்ட பகுதிநேர ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது),
திருச்சிராப்பள்ளி - 620 002, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது),
திருச்சிராப்பள்ளி - 620 002, தமிழ்நாடு, இந்தியா.

*has Published a paper titled*

திருத்தொண்டர் காப்பியத்தில் மேலோங்கியுள்ள
பெண்ணியச் சிந்தனைகள்

Sl.No. 100 100
Pages : 703-712

Published by
RAJA PUBLICATIONS
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

Chief Editor
Dr. M. Sadik Batcha
Associate Professor
PG and Research Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India
Mobile : 94434 17242, Email : ms_batcha@yahoo.co.in



Scanned by TapScanner

Vol. 9 No. 2

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*
*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*M. Ramakrishnan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Bharathi Prakash*

பங்குனி-ஆனி 2052
April - June 2021
ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed Group-I Journal

று அச்சு

*Published by*
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

**28** பகுதி-2
Part -2

Scanned by TapScanner

பங்குனி-ஆனி 2052

Vol. 9 No. 2 April - June 2021 ISSN : 2321 - 984X


| | | | |
|---|---|---|---|
| 51. | N. GOMATHI & A.B. ANGAPPAPILLAI | OUTLINE OF WOMEN AT SERVICE SECTORS IN TIRUCHIRAPPALLI DISTRICT | 349-356 |
| 52. | இரா. சற்குணம் | தோழர் நாவல் முன்நிறுத்தும் தொழிற்சங்கப் போராட்டங்கள் | 357-360 |
| 53. | இரா.ஜெயந்தி & இரா.ரம்யாமகேஸ்வரி | குறிஞ்சிப்பாட்டில் தோழியின் அறிவாற்றல் | 361-366 |
| 54. | க. கோமதி & இரா.பிரபாகர் | குளாமணியில் அறம் | 367-372 |
| 55. | ப. அருணாதேவி & த. ஜெயலலிதா | அகநானூறு பெயரீடும் தொகுப்பு நெறியும் | 373-378 |
| 56. | S. RAJAGOPAL & R. PRAIYA | STATUS OF MANGAMMAL SALAI, TAMUKKAM PALACE AND TAMUKKAM GROUND- A HISTORICAL INVESTIGATION | 379-386 |
| 57. | தி. இராதா & ம. கண்ணம்மாள் | ஆண்டாள் பிரியதர்ஷினியின் கதைக்கலை | 387-392 |
| 58. | HANAMESH DUDYAL & H.R. GHARPANKAR | STUDY OF MULTIPULE INTELLIGENCES OF X STANDARD STUDENTS OF CBSE SCHOOL IN RELATION TO SELECTED VARIABLES | 393-397 |
| 59. | ப.ஜெயராஜ் | பண்பாட்டு அசைவும் நாட்டார் பண்பாடும் | 398-404 |
| 60. | த. பாலுசாமி | கண்டிவீரன் சிறுகதைகள் : இலங்கைத் தமிழ் மக்களின் மரணமும் மர்மமும் | 405-409 |
| 61. | M. PRABAVATHY & R. SIVARANJANI | FUNCTIONAL ARITHMETIC SKILL DEVELOPMENT OF CHILDREN WITH INTELLECTUAL DISABILITY AT PRIMARY LEVEL THROUGH MOBILE APPLICATIONS | 410-414 |
| 62. | PUSHBARAJ. S & PK MUTHUKUMAR | SOCIO ECONOMIC ASSESSMENT AND THE IMPACT OF DISASTER IN CUDDALORE DISTRICT | 415-420 |
| 63. | M. PRABAVATHY, P. KANNAN, M. VEERAKUMAR & R. SIVARANJINI | STRESS RELATED TO PARENTING CHILDREN WITH DISABILITIES DURING COVID-19 LOCKDOWN | 421-426 |
| 64. | RASEENA. CK & K. SOMASUNDARAN | STATUS OF ADIYA WOMEN IN KERALA | 427-432 |
| 65. | தி. நெல்லையப்பன் | நுண்ணிலை கற்பித்தல் நூல் நோக்குத்திறன் | 433-439 |
| 66. | M. JEBAKUMAR & V. SUNDARARAMAN | DIGITAL MEDIA USE AND IDENTITIES. A STUDY AMONG COLLEGE STUDENTS IN TIRUNELVELI, TAMIL NADU | 440-446 |
| 67. | ஷாகிதா கிறிஸ்டல் ச. | நீலபத்மநாபனின் நாவல்கள் கட்டும் நகர மக்களின் வாழ்வியல் | 4J |
| 68. | MOHD RAFI PARAY | EMPOWERMENT OF TRIBAL WOMEN IN KASHMIR VALLEY WITH SPECIAL REFERENCE TO THEIR SOCIAL STATUS | 4-46 |
| 69. | க. விஜய கீதா & ந. சுபா | புறநானூற்றில் பெண்பாற் புலவர்கள் | 461-466 |
| 70. | JACOB ASHIK BONOFER & S PARTHIBAN | DEMOCRACY IN PERILS IN SOUTH ASIA | 67-473 |
| 71. | ச. வனிதா | சுற்றுச் சூழலும் 'சூல்' நாவலும் | -484 |
| 72. | RANA HALDAR & KUMARI ANAMIKA | A STUDY OF GENERAL ETHICS OF H ER EDUC N' ENTS IN RELATION TO THEIR DEMOGRAP | 493 |
| 73. | அ. சித்ராதேவி & குமரன் | தமிழ்நாட்டு வளர்ச்சியில், அண்ணா நெடுந் மக்கள் ம்பாட்டுக் கொள்கைகளின் தாக்கம் | -503 |
| 74. | M. SURESH & V. SUNDARARAMAN | UNDERSTANDING THE CHALLENGES AN OF COMMO ERVICE CE R IN TIRUNELVELI, TAMIL NADU | 504-508 |
| 75. | ஸ்ரீமத் திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள் | சிவபோகசாரத்தில் முப்பொருள் இயல்பு | 509-514 |
| 76. | ஜெ. மணிச்செல | ந்தக்கரங்கா புலப தும் குழந்தைத் ழிலாளர் அவலநிலை | 515-524 |
| 77. | NAGAVENI. E & D. THIRUM | PLOYMEN SCENA IN THE SOUTH I N STATES - OMPARAT E UDY | 525-536 |
| 78. | D. JOHN SUDHA & C. VENKATACHA | EVANCE DIVISION OF LABOR IN TO MAKING FAMILIES KONDAPALL LLAGE, KRI HNA DISTRICT, ANDHRA PRADESH | 537-544 |
| 79. | க. விமலா | கல்கி இதழில் | 545-550 |
| 80. | ச. கவிதா & வெ. ஜனக மாயா | சாமி கவா ட்டுப்படலப் பாடல்களில் இலக்கண நயம் | 551-556 |
| 81. | பொ. கலைச்செல & சி.காந்தி | புற றில் ஔவையாரின் அறக்கருத்துக்கள் | 557-561 |
| 82. | சே. ராம்பிரகாஷ் & பெ. | சங்க இலக்கியம், நிலம் பூத்து மலர்ந்த நாள் புதினத்தில் பாணர்களின் வாழ்வியல் | 562-573 |
| 83. | மு. தேவகி | சீவக சிந்தாமணியில் கலைகள் | 574-579 |
| 84. | அ. ஸ்டெலிலா & இரா.கு | குறுந்தொகை தோழி கூற்றில் பரத்தமை | 580-587 |
| 85. | POOJA SHREE, SHIVA A RAJA & SARABJEET SINGH | USES AND EFFECTS OF ICT IN HIGHER EDUCATION SYSTEM WITH SPECIAL REFERENCE TO 'SWAYAM' (A SURVEY BASED STUDY OF I.K.G PUNJAB TECHNICAL UNIVERSITY, KAPURTHALA) | 588-598 |
| 86. | ஆ. மரிய தனபால் | சங்க இலக்கியத்தில் நடுகல் | 599-609 |
| 87. | K. SHIVSHAKTI & S. PARVIN BANU | PREDICAMENT OF THE MARGINALIZED IN ROHINTON MISTRY'S *SUCH A LONG JOURNEY* AND *A FINE BALANCE* | 610-617 |
| 88. | NEETHU V S | AN ANALYSIS OF THE RECOGNITION RECEIVED BY BARRISTER GEORGE JOSEPH AMONG THE MADURAI PEOPLE: IN THE CONTEXT OF CRIMINAL TRIBES ACT OF 1911 AND THE MADURA LABOUR UNION | 618-627 |
| 89. | P. SHANTHINI | BRITISH COLONIALISM, KANGANY SYSTEM AND ENTRENCHMENT OF CASTE SYSTEM IN THE PLANTATIONS OF SRI LANKA | 628-639 |
| 90. | A. APPU & BEBIN RAJ D | XENNIALS ONLINE GROCERY SHOPPING PATTERNS DURING COVID 19 CRISIS IN CHENNAI DISTRICT: AN EMPIRICAL STUDY | 640-644 |
| 91. | K. SARANYA & V. VIJAYARANGAM | THE IMPORTANT HINDU PILGRIMAGE CENTRES OF TOURIST INTEREST IN VILLUPURAM DISTRICT | 645-652 |
| 92. | UMARANI & K SOMASUNDARAN | PATTERNS OF ALCOHOL CONSUMPTION AND THE IMPACT ON ALCOHOL RELATED AGGRESSIVENESS IN SLUM AREAS OF PUDUCHERRY AMONG MALE MEMBERS | 653-657 |
| 93. | P.S.MUTHULAKSHMI & R. SOUNDARA RAJAN | RELIGION AND CULTURE THROUGH THE AGES– A STUDY | 658-662 |
| 94. | ர. இனியா | நா.முத்துக்குமார் கவிதைகளில் பெண் | 663-667 |
| 95. | அ. துளசிமணி | தமிழ்த் திரையிசைப் பாடல்களில் உழைப்பாளர் நலம் | 668-673 |
| 96. | கே.சி. சரவணன் | திருக்குறள் எடுத்துரைக்கும் மேலாண்மை | 674-680 |
| 97. | சே. கரும்பாயிரம் | திருவிடைமருதூர் வட்டார அளவைகள் | 681-690 |
| 98. | இரா. கார்த்திகா & மு. அருணாசலம் | நெருப்பாற்றில் நீந்தி வந்தேன் சுயசரிதையில் திருநங்கைகளின் வாழ்வியல் போராட்டங்கள் | 691-695 |
| 99. | கு. மலர்க்கொடி & ச. கௌசல்யா | கி.ரா வின் நாட்டுப்புறக் கதைக்களஞ்சியம் கட்டும் மீவியற்கைப் புனைவு | 696-702 |
| 100. | நா.ஜான் கென்னடி & ஆ.ஜோசப் சகாயராஜ் | திருத்தொண்டர் காப்பியத்தில் மேலோங்கியுள்ள பெண்ணியச் சிந்தனைகள் | 703-712 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241

Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned by TapScanner

# திருத்தொண்டர் காப்பியத்தில் மேலோங்கியுள்ள பெண்ணியச் சிந்தனைகள்

**கா. ஜான் கென்னடி**
முனைவர் பட்ட பகுதிநேர ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது),
திருச்சிராப்பள்ளி - 620 002, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது),
திருச்சிராப்பள்ளி - 620 002, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

'அறம் செய விரும்பு' என்ற ஒற்றைத் தத்துவத்திலும், 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற உலக சகோதரத்துவச் சிந்தனையிலும் வெளிப்படும் தமிழனின் அறக் கருத்துக்களுக்கு நிகரான விழுமியத் தொடர்கள் உலக இலக்கியங்கள் எவற்றிலும் இல்லை என்றால் அது மிகையானதல்ல. அக வாழ்க்கைக்கு நெறி வகுத்த தமிழினத்தின் இலக்கியப் பெரும்பரப்பில் பெண்ணியச் சிந்தனைகள் விரவிக்கிடக்கின்றன. அந்த வகையில் சூ.இன்னாசி எழுதியுள்ள திருத்தொண்டர் காப்பியம் பெண்ணியச் சிந்தனைகளின் கருவூலமாகத் திகழ்கிறது என்பது புலப்படுகிறது.

**கலைச்சொல்லாக்கம்**

உரு, உருக்கவிஞர்கள், கதைப்பாடல்,

**முன்னுரை**

பழங்காலத்தில் ஓய்வாக இருந்தபொழுதெல்லாம் அரசரும், வள்ளல்களும் காப்பியச் செய்யுள் கேட்டுக் களிந்து மகிழ்ந்தனர். கதையே செய்யுளாக பாடிய பொழுது இன்னோசையாக நிலைபெற்று, மறக்க முடியாதபடி மக்கள் மனத்தே ஊன்றி நின்றது. பொதுமக்கள் காப்பியங்களாகவும் வளர்ந்தது. இத்தகைய காப்பியங்களைப் பாராட்டுவதால் தமக்குப் புகழ்வரும் எனக் கருதிய அரசர்கள் அதில் ஈடுபட்டதும் உண்டு. அரண்மனையிலிருந்து குடிசைக்கும், குடிசையில் இருந்து அரண்மனைக்கும் புரண்டு, புரண்டு வளர்ந்தோங்கிய இலக்கியமே காப்பியம் ஆகும்.

ஆணாதிக்க சமுதாயம் உருவாக்கிய மதிப்பீடுகளை வழிமொழிந்து தனது கருத்துக்களை வார்த்துக் காட்டிய சில பெண்பாற்புலவர்களைப் போலன்றி இயல்பாக, சுய சிந்தனையுடன் தனக்கான மொழியை வெளிப்படுத்தியுள்ளார். அள்ளூர் நன்முல்லையார். பெண்கள் தங்களது அனுபவங்களையும், ஆதங்கங்களையும் பேசலாம். ஆனால் தங்களது உணர்வைப் பேசக் கூடாது என்ற கட்டுப்பாடுகளை மீறி ஒலித்துள்ளது அள்ளூர் நன்முல்லையாரது குரல்.

**"தனக்கான வெளியையும் காலத்தையும் சமூக மதிப்பீட்டு வரையறைகளை மீறி மொழிக்குள் கட்டமைப்பதுதான் பெண்மொழி"**[1] (உன்னதம் இதழ்ஜீன் 2005. மாலதிமைத்ரி) என்பார்



Scanned by TapScanner

மாலதி மைத்ரி. பெண் மொழி உடலுக்குள் சூழல் மாற்றம் கிளர்த்தும் கிளர்ச்சி, வேட்கை, வலி, கனவு ஆகியன உள்ளிட்ட அக நிகழ்வுகள் சார்ந்து உருவாகின்றது. இவ்வுணர்வுகள் குறியீடுகளாய் இடம் பெற்றிருப்பதாக வாசிக்க இடம் தருமானால் அக்கவிதையை பெண்மொழி இயங்கும் கவிதையாக கருத முடியும் என்கிறார் பா. வெங்கடேசன்.

"குக்கூ என்றதுகோழி: அதன் எதிர்
துட்கென்றது என்றூஉ நெஞ்சம்
தோள் தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால்
எனவே"[2] (குறுந்தொகை பாடல்: 157)

**மகளிர் சார்ந்த துறைகள்**

தொல்காப்பியம் கூறும் காஞ்சித்திணைத் துறைகளில் 11 துறைகள் மகளிரோடு தொடர்புடையன. தொடர் காஞ்சி, ஆஞ்சிக்காஞ்சி, மகட்பாற் காஞ்சி, தலைப்பெயல் நிலை, பூசல் மயக்கம், முதுகாஞ்சி, முதானந்தம், முதுபாலை, உதாரநிலை, தாபதநிலை, பாலைக்காஞ்சி, தலைப்பெயல்நிலை என்பனவாகும்.

குடும்பம் என்பது சமூகத்தோடு தொடர்புடையது. இக்குடும்ப வாழ்வானது இயற்கைச் சீரழிவு, போர் போன்ற காரணிகளுக்கு ஆட்படும்போது சிதைவுறுகிறது. இக்குடும்ப வாழ்வின் சிதைவுகளை தொல்காப்பியம் கூறும் காஞ்சித்திணைத் துறைகள் எடுத்துரைக்கின்றன. சமுதாய வாழ்வானது ஆண், பெண் இருவரைச் சார்ந்தே அமைந்தது. இருவரில் யாரேனும் ஒருவரை இழக்க நேரிட்டால், அவ்வாழ்வு துன்பநிலையை எய்துகிறது.

நீத்த கணவன் தீர்த்த வேலின்
போத்த மனைல் ஆஞ்சியானும்
.........................
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டேன்
தலையொடு முடிந்த நிலையொடு
.........................
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகற் புலம்பிய முதுபாலையும்.
.........................
காதலன் இழந்த தாபத நிலையும்
.........................
நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட பாலைநிலையும்[3]
(புறத்திணையியல். 1025)

பெண்ணியம் தற்காலத்தில் விரைவாகவும், பன்முகத் தன்மையும் கொண்டு வளர்ந்து வரும் ஒரு கருத்தியல் அடிமைத்தளையில் உரிமைகளை இழந்து உணர்வுகளைத் துறந்து, உறவுகளுக்கென்று மட்டுமே வாழ்ந்து உயிர் பிரியும் போது பெண்களின் வாழ்க்கை பொருண்மையற்றதாக காலம் காலமாக இருந்து வருகிறது. இத்தளைகளை அகற்றி அவர்களுக்கான தனி அடையாளத்தை இனம் காணவும் தோன்றியதே இப்பெண்ணியச் சிந்தனை எனலாம். சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலத் தமிழ் பேரகராதி Feminism என்பதற்குப் வண் உரிமை ஏற்புக் கோட்பாடு, பெண்ணுரிமை ஆதரவு என்று பொருள் கூறுகிறது.

ஆங்கிலத்தில் Feminism என்று வழங்கும் கலைச் சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுவர். இந்த ஆங்கிலச்சொல் பெண்ணைக் குறிக்கும் Femina என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாப் பிரச்சனைகளையும் புரிந்து கொண்டு தீர்வுகாண முயல்வதாகும். பார்பாரா ஸ்மித், எல்லா தரப்புப் பெண்களுக்கும் உரிமை பெற்றுத் தருவதே பெண்ணியம் என்றார்.[4] (சி.என். குமாரசாமி, பெண்ணிய நோக்கில் பாரதி, ப.9)



Scanned by TapScanner

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன்மூலம் உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார் சார்லட் பன்ச். இவ்வாறு பெண்ணியம் என்ற கருத்தியலுக்கான வரையறைகள் வெவ்வேறு அறிஞர்களால் வெவ்வேறு விதமாக வரையறுக்கப்பட்டாலும் அதன் அடிப்படைக் கோட்பாடு தன் உரிமையைக் குறித்த விழிப்புணர்வு பெறுதல், ஆணாதிக்கத்தை அடையாளம் கண்டு எதிர்த்தல், அனைத்துத் துறைகளிலும் சம உரிமை அடைதல் எனலாம்.

பெண்ணியம் இன்று பரவலாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வரும் இவ்வனுகுமுறை பழங்கதைகளை, இலக்கியங்களை உறவாசிப்பு செய்தலை மறுபரிசீலனைக் குட்படுத்துதல் பெண்ணிய வாசிப்பு - பெண் எழுத்து - பெண்மொழி - பெண் உடல் - பெண்ணிய உளப்பகுப்பு - பாலின வேறுபாடுகள் - பெண்ணிய அரங்குகள் எனப் பன்முக வீச்சுகளில் பரிணமித்து வருகின்றது. பெண்ணியம் என்பது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள்ளும், குறுகிய வட்டத்திற்குள்ளும் முடங்கி கூடியதல்ல. அது காலந்தோறும் வளர்ந்து வரும்.

சமூகத்தில் ஆண், பெண் இருபாலருக்குமே தணிக்கை இருப்பின் பெண்ணிற்கு இது கூடுதல் இறுக்கத்துடன் கூடியதாகவே உள் பிறந்ததிலிருந்து, பெண்ணிடம் திணிக்கப்படும் கருத்தாக்கங்கள் இத்தணிக்கை வேறுபடுகிறது. **ஒருவர் பெண்ணாகப் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறாரா?** என்ற சிமோன் டி பூவாவின் கூற்று இங்கு நினைவுகூரத்தக்கது. தொடர்ந்து இக்கருத்தாக்கங்களைக் கட்டமைப்பதில் சமூக நுண் அரசியலோடு செயல்படுகிறது. தனக்கே இவை எல்லாம் விதிக்க பட்டதாகப் பெண்ணே நம்பும் வகையில் கட்டமைக்கப்படுகின்றன. பெண் படைப்புகளில் இக்கருத்தியல் சார்ந்த தணிக்கை நடை பெறுவதைக் காணமுடிகிறது.

பெண் தன் உணர்விசை படைப்பில் பதிவு செய்ய சமூகம் அனுமதிப்பதில்லை. ஆனால் பெண்களே தன் படைப்புகளில் எவையெல்லாம் இடம்பெறக் கூடி என்பதனை முடிவு செய்கிறவர்களாக இருக்கின்றனர். இதற்கான பின்புலமே அடிப்படைக் காரணம் சமூகக் கட்டமைப்பே. பெண் கவிஞர்கள் ஒரு எல்லைக்கு மேல் பேச சமூகம் அனுமதிப்பதில்லை. புனையப்பட்டு பெண்ணுக்காக வரையறுக்கப்படுகிறது.

கி.பி.3-ஆம் நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டு வரை மகளிர்நிலை மிகவும் தாழ்ந்தது. பரத்தமை செழித்தது. ஆணாதிக்கம் வளர்ந்தது. பக்தி இயக்க காலத்தில் மகளிர் சமயத் தொண்டாற்றினர். கார்டன் என்பவர் "பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம் என்றார். புட்சர் என்பவர் **பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம்'** (முத்துச்சிதம்பரம், 'பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் ப.13) என்கிறார்.

ஆகவே பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும், சுரண்டல் முறைகளையும், உணர்ந்துகொண்டு ஆண்களை அல்ல ஆணாதிக்கத்தையே எதிர்கொள்ளவும் பெண்ணியம் தெளிவான வரையறையை முன் வைக்கின்றது. மற்றும் சமூகத்தில் பெண் செயல்படுபவளாகவும், உரிமையுடையனவளாவும், பெண் பொறுமையுடையவளாகவும், சார்ந்திருப்பவளாகவும் இருக்கின்றார்.



Scanned by TapScanner

"இலக்கியங்கள் இலக்கணக் கட்டுக்கோப்பில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள தொடங்கின. மரபு வழியான கவிதைச் சொற்களையும் யாப்பு முறைகளையும் விடுத்து உருக்கவிஞர்கள் எந்தக் கருத்தினை எடுத்தாளவும் அவற்றின் மூலம் ஒரு உருவைப் படைக்கவும் விழைந்தார்கள்" (வை.சச்சிதானந்தம், மேலை இலக்கியச் சொல்லகராதி, பக்.68) என்று வை.ச்சிதானந்தம் குறிப்பிடுகிறார். அந்த வடிவமே கவிதைகளாகும். மனத்துள் ஏற்படுகின்ற உணர்வுகளின் தொகுப்பே கவிதையாகும். சூழல் தான் மனிதனை எழுத வைக்கிறது. அதனால் தான் அமெரிக்கக் கவிதைகளில் மனச்சிக்கல் கொண்ட கவிதைகளும், தமிழீழக் கவிதைகளில் விடுதலைத் தாகமும், பிரெஞ்சுக் கவிதைகளில் தன்னிரக்க சோகமும் அதிகமாகக் காணப்படுகின்றன. தமிழ் இலக்கிய மரபில் பெண்ணியக் கருத்துக்களை அனைத்து இலக்கியங்களிலுமே நம்மால் காண இயலுகிறது. அந்த வகையில் கு.இன்னாசி எழுதியுள்ள திருத்தொண்டர் காப்பியத்தில் மேலோங்கியுள்ள பெண்ணியச் சிந்தனைகளைத் தொகுத்துக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**சமயத் தொண்டர்களின் இலக்கியப் பங்களிப்பு**

இந்துமதத்தில் இருந்து கிறித்தவ மதத்திற்கு மாறிய கிறித்தவர்கள் தாம் இதுவரை பின்பற்றிய மதத்தில் இருந்த நாட்டுப்புற வழக்கங்களை ஒதுக்கிட முடியாமல் பெரிதும் மனச்சோர்வுக்குள்ளானார்கள். இதையறிந்த அண்டிறீக்கு அடிகளார் மக்கள் விரும்பிய நாட்டுப்புற வழக்கங்களைக் கிறித்தவமறையிலும் பெற வழி வகுக்க ஆரம்பித்தார். இதன் விளைவாக மதம் மாறிய கிறித்தவர்களும் "**இந்து சமயச் சார்பான தெம்மாங்கு, கும்மி, கதைப்பாடல், நாடகம் முதலியவற்றைப் பாடி மகிழ்ந்தார்கள்.**"[6] (ஆ.பி.அந்தோனி இராசு, புனித அந்தோனியார் அம்மானை, ப.6) *என்றும்* "செய்யுள் இயற்றும் திறமையுடைய கிறித்துவர்களையும் இந்துக்களையும் சமயத் தொண்டர்கள் தேர்ந்தெடுத்து நூல் இயற்றச் செய்தனர்"[7] (ஆ.பி.அந்தோனி இராசு, புனித அந்தோனியார் அம்மானை, ப.6) *என்றும்* ஆ.பி.அந்தோனி இராசு குறிப்பிடுகிறார்.

சமூகத்தின் தேவைக்கும், காலத்தின் நகர்வுக்கும் ஏற்ப மாறுபடும் தன்மையுடையது இலக்கியம். உள்ளதை உள்ளபடி சொல்வது அறிவியல். உள்ளதை உணர்ந்தபடி சொல்வது இலக்கியம் என்பார் தமிழறிஞர் மு.வ. அவர்கள். அந்த இலக்கிய மரபு, காலத்தின் தேவைக்கு ஏற்ப மாறுபாடுகளை உள்வாங்கி வளர்ந்திருக்கிறது. "**இலக்கணம் இலக்கியம் ஆகியவற்றில் மாற்றங்கள் நிகழும் என்றாலும் விரைவாக மாறுதலடைவது கவிதை**"[8] (*அரங்க.சுப்பையா, இலக்கியத் திறனாய்வு, இசங்கள், கொள்கைகள், பாவை ப.279*) என்பதும், "**தான் அனுபவித்த ஒரு உணர்ச்சியை அப்படியே அனுபவிக்கும்படி செய்யத் தூண்டும் மன வெளிப்பாடே கலை. கலையின் அனைத்து வடிவங்களிலும் மாற்றங்கள் நிகழும் என்றாலும் விரைவாக மாறுதலடைவது கவிதை**"[9] (*க.ப.அறவாணன், கவிதை, உடல், உள்ளம், உயிர் ப.9*) என்பதும் கவிதை, செய்யுள் மாறுதல்களைக் கூறுவனவாகும். இக்கவிதையைக் கலையாக அறிமுகப்படுத்துகிறார் முனைவர் க.ப.அறவாணன்.

தமிழில் புதுக்கவிதையின் அறிமுகத்திற்கு, அன்றைய மேலை நாடுகளான இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் இலக்கிய அரசியல் நகர்வுகளும், உலகச் சூழலும் மிக முக்கிய காரணிகளாக அமைந்திருந்தன என்பதே வரலாறு. தமிழ் இலக்கிய பரப்பில சங்க காலம் தொடங்கி இக்காலம் வரையில் உள்ள அனைத்து இலக்கியங்களையும் கவிதைகளாகவே பார்க்க இயலும். இலக்கணச் சிறப்பும், இலக்கிய வளமும் கொண்ட தமிழ் இலக்கிய வரலாற்றை



Scanned by TapScanner

கீழ்க்கண்டவாறு பகுக்கப்படுகிறது.

காதல் கவிதை (சங்க இலக்கியம்)

நீதிக்கவிதை (நீதி இலக்கியம்)

அருபசிக்கவிதை (பக்தி இலக்கியம்)

கதைக்கவிதை (காப்பிய இலக்கியம்)

கைக்கிளைக்கவிதை (பிரபந்த இலக்கியம்)

போற்றிக்கவிதை (தனிப்பாடல்)

தேசியக் கவிதை (தேசிய இலக்கியம்)

தமிழ் நேச கவிதை (பாரதிக்குப் பிறகான தமிழ் இலக்கியம்)

நாட்டுப்புறக் கவிதை (நாட்டுப்புற இலக்கியம்)

புதுக்கவிதை (புதுக்கவிதைகள்)

என க.ப.அறவாணன் தம் ஆய்வு நூலான கவிதையின் உயிர், உள்ளம், உடல் என்னும் ஆய்வு நூலில் தொகுத்துக் கூறுகிறார்.

**திருத்தொண்டர் காப்பியம் - அறிமுகம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருமயம் சூசை, லூர்து தம்பதியருக்கு 1934 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ஆம் நாள் பிறந்தவர் பேராசிரியர் சூ.இன்னாசி. திருமயம், தேவகோட்டை ஆகிய ஊர்களின் பள்ளிகளில் தொடக்க மற்றும் பள்ளி மற்றும் இறுதிக் கல்வியையும் கற்ற இவர், இடைநிலை ஆசிரியர் பயிற்சியையும் முடித்து ஆசிரியர்பணி அறப்பணி; அதற்கு உன்னை அர்ப்பணி என்ற வகையில் தம் ஆசிரியப் பணியைத் தொடங்கினார். ஆசிரியர் பணியினையே வித்துவான், தமிழ் இளங்கலை, முதுகலை போன்ற பட்டங்களையும் பெற்றார்.

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் பேராசிரியராகப் பணி நியமனம் பெற்று முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். 1983 ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரை பத்து ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறையில் பணியாற்றிய இவர் அத்துறையின் தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றியவர். தமிழ்ப் புலத்தில் ஆய்வு செய்து முதுமுனைவர் (டி.லிட்) பட்டமும் பெற்றவர். தமது மேற்பார்வையில் 35 பேர் முனைவர் பட்டமும், 40 பேர் இளமுனைவர் பட்டமும் பெற வழிகாட்டியுள்ளார். எண்பதுக்கும் மேற்பட்ட கருத்தரங்குகளை நடத்திய பேராசிரியர் எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார்.

தாம் உணர்ந்த, உள்வாங்கிய கிறித்தவ மறையின் ஆழமான ஈடுபாட்டின் காரணமாக அவர் எழுதிய காப்பியமே ‘திருத்தொண்டர் காப்பியம்’ ஆகும். சென்னை காவ்யா பதிப்பகம் 2007 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள இந்நூலில் மறைசாட்சி தேவசகாயத்தைக் காப்பியத் தலைமகனாக ஏற்று, அவரின் வாழ்வியலுக்கு அடிப்படைச் சான்றுகளாக வழங்கிவரும் இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புக்கள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்காப்பியத்தை உருவாக்கியுள்ளார்.

மறைசாட்சி தேவசகாயத்தின் அடிப்படை வரலாறு மறைக்காமல், மாற்றாமல் காப்பியத்திற்கு ஏற்ற வகையில் புனைவுகள் மீக்கூறும் கதைப்போக்குகள் இக்காப்பியத்தில் அமைந்துள்ளன. சில உண்மைக்கு வேறுபடுவனபோல் தோன்றினும், அடிப்படைக்கு மாறானவை அல்ல என்று ஆசிரியர் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் உள்ள கதைகள், புதிய ஏற்பாட்டில் இயேசுபிரான் கூறிய அருளுரைக் கதைகள் ஆகியவை காப்பியத்தில் இடம்பெறும் கிளைக்கதைகளாகக் கொள்ளத்தக்கன. இவ்வாறு, தமிழ்க் காப்பிய இலக்கணக் கோட்பாடுகளைப் போற்றிச் சமயத்திற்கும், தமிழுக்கும் சிறப்பளிக்கும் ஒரு காப்பியமாகத் திகழ்கிறது.



Scanned by TapScanner

குலத்திற்கே அவள்முதல்வி குடும்பச் செல்வி
கூறுபல தெய்வங்களின் வடிவ மாவாள்
கலம்செய்ய மண்முதல்போல் கற்பின் பாலால்
கணவர்பலர் முறைஒழிக்க முனைந்த தலைவி
சிலம்புமகள் கற்புக்கே விளக்க மாகிச்
சிறுதெய்வம் எனப்புகழும் பெற்றிக் குரியாள்
புலம்புகின்ற இழிசனர்க்குப் புரிய வைத்துப்
புதியநெறி தோற்றுவிக்க முயன்ற
பெண்டாள்[10]

திருத்., பாடல் - 306)

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கிற எல்லைகளுக்குள் பெண்கள் அடக்கப்பட்டாலும், இல்லத்தை நல்லறமாக்கும் பொறுப்பு பெண்ணையே சார்ந்துள்ளது என்பதை இக்காப்பியத்தின் பல பாடல்களில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

மலையாளக் குலவிளக்காய் ஆன தையல்
மானமிகு தமிழ்மரபைப் போற்றும் பெண்ணாள்
கலைமகளும் திருமகளும் கைகள் கோத்துக்
களிநடனம் புரிந்தொருங்காம் தெய்வம்
போன்றாள்
சிலைவடிவே பேசுந்திறன் பெற்றாள் போன்று
சிறுகுறையும் புலப்படாத பளிங்காய் ஆனாள்
உலைவாய்க்கும் வேலையிலை ஊர்வாய் மூட
உஞற்றுவதற்கும் வேலையிலாப் புகழில்
தோய்ந்தாள் [11] (திருத்., பாடல் - 306)

மலையாள நாட்டில் பிறந்திருந்தாலும் கலைமகள், திருமகள் என தமிழரின் மாண்பைப் போற்றும் பெண்ணாகப் பார்க்கவி விளங்கினாள் எனப் பதிவு செய்யும் ஆசிரியர், நெஞ்சில் உரமும், அறிவு முதிர்ச்சியும், தெளிந்த சிந்தனையும், கொள்கையில் உறுதியுமிக்க பெண் கணவனுக்கு நல்லுரை பகர்பவளாக, சுற்றத்தாரின் நலம் பேணுபவளாக, காதல் மனம் கொண்டவளாக, சமயப்பற்று மேலோங்கியவளாக மிளிர்வதை இக்காப்பியத்தின் பெண் பாத்திரங்களிடையே நம்மால் காண முடிகிறது.

ஆணாதிக்கச் சிந்தனையால் அமிழ்த்தப்பட்டு இன்று வேலையில்லாமல் ஓய்வில் இருப்பதாகக் காட்டப்படுகிறாள் என்கிற ஆதங்கத்தையும் இக்கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

அழலுருக்கி வார்த்தெடுத்த ஐம்பொன்
சிலையோ?
அரம்பையர்கள் தொழுதேத்தும் தெய்வ
மகளோ?
குழலிசையும் யாழொலியும் குழைத்த
கூட்டோ?
கூத்தறிந்த வான்மகளோ குணத்தின் குன்றோ?
நிழல்வழங்கும் பெண்கொடியோ நீண்ட
கூந்தல்
நிலைமாறி நின்றதொரு மேகக் காடோ?
தழல்நிலத்தின் நின்றுயர்ந்த தங்க மயிலோ?
தரணியிலே நின்றுயர்ந்த தந்தத் தூணோ? [12]
(திருத்., பாடல் - 306)

பெண்ணை அழகு என்கிற ஒற்றைப்புள்ளியில் குவித்துவிடாது, அதேவேளையில் ஒத்த அன்புடைய தலைவன் தலைவியரிடத்தில் நிகழும் அழகு நடுவமிட்ட கருத்துக்களை அவளுடைய மாண்பு சிதையா வகையில் ஆசிரியர் காட்டியுள்ளது சிறப்புக்குரியதாகும். மனைவியின் எண்ணம் என்னவாக இருக்கும் என கணவன் கேட்க நினைக்கும்போது, அவனது உள்ளக்கருத்தினைத் தானே உணர்ந்து கொண்டவளாய் நல்லோர் சொல் நன்மைக்கே, நிறைவேற்றுவீர் உம் விருப்பத்தை என்று மனைவி விரும்புவதாகக் காட்சி தருகிறார்.

அழகென்றால் அதற்கான விளக்கம் நீதான்
அன்பென்றால் அதற்கான எழுத்தே நீதான்
தழலென்றால் அதற்கான கற்பே நீதான்
தங்கமெனின் அதற்கான மூலம் நீதான்
புழலென்றால் நிரப்புகின்ற நீரே நீதான்
புயலென்றால் வழங்குகின்ற மேகம் நீதான்
நிழலென்றால் தருகின்ற மரமே நீதான்
நிகழ்வென்றால் நிகழ்த்துபவள் நீயே
என்பான் [13] (திருத்., பாடல் - 593)



Scanned by TapScanner

அன்ன நடையும், அரம்பை அழகும், கருமேகக் கூந்தலும், சுழி போன்ற கொண்டையும், கெண்டை விழியும், விற்போல் வளைந்த நெற்றியும், வானவில் போன்ற விற்புருவமும், அறிவை மயக்கும் நிறமும், அணிகலன் அணிந்த இரதி போல தலைவி தலைவனுக்குத் தோன்றுகிறாள் என்ற கருத்துக்களை இக்காப்பியத்தில் நம்மால் காணமுடிகிறது.

எந்த ஓர் இலக்கியப் படைப்பாளனும் நான் வாழும் காலத்தினின்றும் விலகி நின்று இலக்கியத்தைப் படைக்க வியலாது. அவன் தன் படைப்பில் அவன் காலத்து நிகழ்வுகளைப் பதிவு செய்து விடுகிறான். இஃது அவன் விருப்பதிற்குட்பட்டும் சில சமயங்களில் அவனையறியாமலும் நிகழ்ந்து விடுகிறது. இதற்குக் காப்பியங்களின் படைப்பாளிகளும் விலக்கல்லர். காப்பியங்கள் வரலாற்றுடனும் அது தோன்றிய காலத்து அன்றாட நிகழ்வுகளுடனும் என இருவகைத் தொடர்புகளைக் கொண்டது என்பார் பால் மெர்ச்சன்ட். காப்பியங்களில் வரலாற்றுக் குறிப்புகள் காணப்பெறலாம். அத்தகைய குறிப்புகள் பிற இலக்கிய வடிவங்களைக் காட்டிலும் மிகுதியாகவே கூடக் காணப்பெறலாம். அதற்காக இதனை ஒரு வரலாற்று நூலாகக் கூறிவிட இயலாது. இது வரலாற்றைச் சொல்கிறது. குறிப்பிட்ட இனைத்தைப் பற்றிக் கூறுகிறது, பழக்கங்களையும் மரபுகளையும் பதிவு செய்து வைக்கும் பதிவேடாக விளங்குகிறது.

அதே சமயத்தில் இஃது ஒரு கதைப் புத்தமாகப் பொதுவான மனமகிழ்விற்கு உரியதாகவே விளங்குகிறது. எனவே, காப்பியங்களை வரலாற்று நூல்கள் எனக் குறிப்பிடலாகாது. படைப்பாளி தான் வாழுங்காலத்து வழங்கும் கதைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்ற அனைத்துப் பண்பாட்டுச் சிந்தனைகளையும் தேவையான அளவிற்குத் தன் படைப்பில் பதிவு செய்துவிடுகிறான். இப்படிப்பட்ட பதிவுகள் அவனது நோக்கத்திற்கும் பாவிகத்திற்கும் வலிமை சேர்க்கக் கூடியதாகவும் அதனை மேலும் விளக்குவதாகவும் அமையும்.

இப்படிப்பட்ட பதிவுகள் முதன்மைக் கதையின் பகுதியாகவோ, அதனை விளக்குவதாகவோ, பாத்திரங்களை அறிமுகப்படுத்துவதாகவோ, படைப்பாளியின் கருத்தை விளக்குவதாகவோ அல்லது சில சமயங்களில் முதன்மைக் கதையோடு ஏதாவது ஒரு வகையில் தொடர்புக் கொண்டதாகவோ அமையலாம். படைப்பாளி தன் வாழ்ந்த காலத்துச் செய்திகளை ஏதாவது ஒரு வகையில் வருங்காலத்தினருக்காக பதிவு செய்து வைக்கும் ஒரு முயற்சியாகக் கூட இவற்றைக் கருதலாம்.

கிறித்தவ மறையினை தேவசகாயத்தின் மனைவி பார்கவி அறிய வருவதே மறையுணர் படலமாகும். பார்கவி வேதங்கள் காட்டாத பொருளை வேற்றுமதம் காட்டாது என்று, கணவருக்கு வந்த துன்பம் கண்டு காணாத சோதிடரே நாட்டில் இல்லை என்கிறாள். மேலும், பார்கவி கணவனின் ஆற்றலை,

**நல்லவற்றை நறுக்கென்று சொல்லி நிற்பார்**
**நாடுவோர்க்கு நல்லவற்றைச் சொல்லி வைப்பார்**
**அல்லவற்றை எதிர்ப்பதற்காம் துணிவு மிக்கார்**
**அரசனவன் ஆனாலும் தங்க மாட்டார்**
**தொல்லைவரும் என்றாலும் துவள மாட்டார்**
**தோன்றிற்புகழ் தோன்றற்காண் அலையமாட்டார்**
**எல்லையெல்லாம் அவர்புகழை அறியார் உண்டோ**[14] (திருத்., பாடல் - 2795)

என்று கணவனின் புகழை எடுத்துரைக்கிறார்.

கணவனவன் வழிச் செல்லலே முறைமையென உணர்ந்த பார்கவி இருதலைக்கொள்ளி எறும்பாய் தவிக்கின்றாள். திருமகன் இயேசு பற்றித் தெளிவாகச் சொல்லுமாறு கணவனைக் கேட்கின்றாள்.



Scanned by TapScanner

பார்கவிக்கு நீலன் இயேசுவாம் தெய்வத்தனைப் பற்றிக் கூறுவதான பாடல் பின்வருமாறு.

**அன்பதனின் உறைவிடாமாம் அவரே இயேசு!**
**அரண்டவர்க்குக் கதிரொளியாம் அவரே இயேசு!**
**துன்பத்தை அழிமருந்தாம் அவரே இயேசு!**
**தூய்மைக்கு வழிகாட்டி அவரே இயேசு!**
**இன்பத்தின் ஏணிப்படி அவரே இயேசு!**
**ஈடில்லா அமைதிவழி அவரே இயேசு!**
**என்புருக்கும் இன்பமொழி அவரே இயேசு!**
**எங்கும் நிறை புதியவொளி அவரே இயேசு[15]**
(திருத்., பாடல் - 2804)

திருமகனின் திருவடியைச் சரணடைந்து திருமறையை ஏற்று திரு நீராட்டு பெறுவதே பாவம் போகும் வழி என்பதனை கணவன் சொல்லக் கேட்டறிந்த பார்கவி திருமகனைச் சேர்வேன் என்று கூறியதால் நீராட்டை வடக்கன் குளத்தில் உள்ளவரிடம் பெறுமாறு கூறுகிறான்.

குறுமொழியும் நறுமொழியுமான தாய் மொழியின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியாகும். தாய்மொழியினை உதறி பிறமொழியை நாடினால் கடின மொழிக்கூட தலைமை இடம் பெறும் என்று மார்த்தாண்ட மன்னனின் தாய்மொழிப் பற்றினை விளக்கும் பாடல் அடிகள் பின்வருமாறு.

**குனிந்தாலும் யானையதும் குதிரை மட்டம்**
**குறுமொழியும் நறுமொழியும் தாயின் மொழியே**
**இனிமையுறு தாய்மொழியே இழிவு செய்யின்**
**இழிவான மொழிகூடத் தலைமை ஏற்கும்**

என்று அமைந்துள்ளது. தலைவன் மன்னரிடம் பணிசெய்ய முற்படுவதை விரித்துரைக்கும் மணிசேர் படலத்துள் அரசனிடம் பணியாளாய்ச் சேரலாமா என்று பலரிடமும் கேட்டறிந்து, தன் மனைவியிடமும் கலந்துரையாடியப் பின்னர் பணியில் சேருவது பணிசேர் படலமாகும். இப்படலம் தலைமகனின் ஆற்றலின் முழுத்திறனும் வெளிப்படுமாறு அமைந்துள்ளது. நீலகண்டன் குருவின் அறிவுரையும், மனைவியின் முடிவினையும் ஏற்று மன்னனிடம் சென்று வணங்கி நிற்கின்றான். மன்னன் அரசப்பணியில் எப்பணிக்கு தகுதியென்று நீயே சொல் என்று கூறியதும் தன் பல்கலைத்திறன் பற்றி,

**வில் பயிற்சி வாள் பயிற்சி மற்றும் உள்ள**
**விரர்கட்குத் தேவையான பயிற்சி எல்லாம்**
**சொற்பயிற்சி இசைப்பயிற்சி மற்றும் உள்ள**
**சோர்வகற்றும் கலைப்பயிற்சி போன்ற வையெல்லாம்**
**தொல் லைகள் தொடர்பான பாடற்பயிற்சி**
**தொலைதூரக் கலைப்பயிற்சி ஆடற்பயிற்சி**
**எல்லாமெனக் கற்றுணர்ந் தானென் றாலும்**
**எம்மன்னன் கழல்களுக்கு அடக்கம் என்றான்[15]**
(திருத்., பாடல் - 593)

என்ற அடிகள் நீலகண்டன் பல்துறை வல்லவன் என்பதை உணர்த்துகிறது. மன்னன் மார்த்தாண்டன் நீலகண்டனின் திறமையும் பணிவும் கண்டு,

**உன் திறமை உன்புலமை உன்றன் ஆற்றல்**
**உள்ளபடி ஒவ்வொன்றும் யானே அறிவேன்**
**உன்பணியைக் குறிப்பிட்டு ஓரிடத்தில்**
**உறையவிட என் மனத்தில் இடமே இல்லை**
**என்னாளாய் எவ்விடத்தும் கண்கா ணிக்க**
**ஒற்றவன் நீ ஆதலினால் எல்லோருக்கும்**
**உன்னைத்தான் மேலாளாய் பணிய மர்த்தி**
**உடன்பணியை ஏற்குமாறு செய்வேன் என்றான்[16]**

அரசு பணியமர்த்துகிறார். நீலகண்டனுக்குப் பணியாற்றுகின்ற போது எவ்வெவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறும் அறிவுரைப் படலத்துள் உள்ள அறவுரைகள் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அறிந்து பின்பற்றதத்தக்கனவாக அமைந்துள்ளன.

எண்ணத்தை இயக்க இயற்றமிழாய், உள்ளத்தை உருக்க இசைத்தமிழாய்



Scanned by TapScanner

நல்வழிப்படுத்த நாடகத்தமிழாய் எழுந்தவளாய் போற்றப்படும் அன்னைத் தமிழை முத்தமிழாகப் போற்றுகிறோம். அந்த அன்னைத்தமிழின் குணமெனப் போற்றி பெண்மையைப் போற்றுவது இக்காப்பியத்தின் கூடுதல் சிறப்பாக அமைகிறது. குடும்பத் தலைவியைத் தெய்வத்தின் வடிவமானவளாகவும், கண்ணகியைத் தெய்வமாக்கி கூறியும் பெண்ணின் மகத்துவத்தையும், மாண்பையும் இக்காப்பியத்தில் எடுத்துக் கூறுகிறார்.

**இசையதற்கே உலகதனில் மயக்கம் கொண்டே**
**இயங்காத உயிருலகில் எதுவு மில்லை**
**அசைகின்ற செடிகொடியும் மயங்கும் என்றே**
**அறிவியலார் சொல்லுகின்ற இசையின் வடிவம்**
**திசையெல்லாம் போற்றுகின்ற இசையின் வடிவம்**
**தீயனையும் நல்லனாக்கும் தெய்வம் என்ற**
**நசையாலே நான்புகழ்தல் தவறோ என்க**
**நாணத்துடன் மனமாறிக் கட்டி அனைத்தாள்**[17]
(திருத்., பாடல் - 560)

**முத்தமிழே நாடகத்தின் முடிச்சே யாகும்**
**முகக்கூறும் கலந்தால்தான் நிறைவு மாகும்**
**இத்தரையில் பேச்சாலின் குரலால் கூடி**
**இணைந்தென்னோ டாடுகின்ற கூத்தால் நீயே**
**வித்ததொன் தலைமாந்தன் இன்பச் சுத்தில்**
**விட்டுன்னை வேறெவள்தான் என்னவோ டாடப்**
**பித்தாகிப் போனவென்னைக் காக்க வென்க**
**பிடித்தவனோ டின்பக்கூத் தாடப் போனாள்**[18]
(திருத்., பாடல் - 562)

பெண்ணுக்கு அலங்காரம் கற்பு. உயிரைப்போல் கற்பைக் காக்க வேண்டும். நிலைத்த நல்ல குணங்களால் தன்னைத்தான் காத்துக் கொள்வதுதான் கற்பாகும். இதனால் தான் கற்புக்கு நிறை என்று பெயர் வைத்தனர். கற்பு நெறிவழுவாமல் தானும், தன்னைச் சார்ந்தோரும் நலம் பல பெற்று மகிழ்வுடன் வாழ நினைக்கும் குணமே பெண்மை குணம் என்று பதிவு செய்யும் ஆசிரியர் மரியாள் தம் மகன் கண்முன் கொல்லப்படும்போது கொண்டிருந்த மன வலிமையையும் பாராட்டிப் பெண்களின் உறுதியை வெளிப்படுத்துகிறார்.

**தொகுப்புரை**

- செய்யுள் இயற்றும் திறமையுடைய கிறித்துவர்களையும் இந்துக்களையும் சமயத் தொண்டர்கள் தேர்ந்தெடுத்து நூல் இயற்றச் செய்தனர்
- தமிழ்க் காப்பிய இலக்கணக் கோட்பாடுகளைப் போற்றிச் சமயத்திற்கும், தமிழுக்கும் சிறப்பளிக்கும் காப்பியமாக திருத்தொண்டர் காப்பியம் திகழ்கிறது.
- இல்லத்தை நல்லறமாக்கும் பொறுப்பு பெண்ணையே சார்ந்துள்ளது என்பதை இக்காப்பியத்தின் பல பாடல்களில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.
- முத்தமிழின் வடிவாக, மென்மையும், மன வலிமையும் கொண்டவராக, கற்பு நெறிவழுவாமல் தானும், தன்னைச் சாந்தோரும் நலம் பல பெற்று மகிழ்வுடன் வாழ நினைக்கும் குணமே பெண்மை குணம் என்பதை இக்காப்பியத்தின் பாத்திரம்வழி அறியமுடிகிறது.

**துணை நின்றவை**


1. இன்னாசி, திருத்தொண்டர் காப்பியம், காவ்யா, 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், சென்னை 24, முதல் பதிப்பு 2007.
2. ஆ.பி.அந்தோனி இராசு (பதி.), புனித அந்தோனியார் அம்மானை, ஆரோக்கியம் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதல் பதிப்பு 1997.




Scanned by TapScanner

3. அரங்க.சுப்பையா, இலக்கியத் திறனாய்வு, இசங்கள், கொள்கைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை 14, முதற்பதிப்பு 2008.

4. க.ப.அறவாணன், கவிதை உடல் உள்ளம் உயிர், தமிழ்க்கோட்டம், 11, 2வது வீதி, மோகன் நகர், பாண்டிச்சேரி 5, இரண்டாம் பதிப்பு 1994.

5. இரா.பிரேமா, பெண் எழுத்துக்களின் அரசியல், அறிவு பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2007.

☙



Scanned by TapScanner